## சுருக்கம்

**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் – குழந்தைகள் மையங்களை நவீனப்படுத்த சமையலறைகளுக்கு எரிவாயு இணைப்பு, எரிவாயு அடுப்பு, பிரஷர்குக்கர் மற்றும் மின்இணைப்பு வழங்குதல் – நிதி ஒப்பளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்ட (சந7(1))த் துறை

அரசு ஆணை (ப) எண். 157 நாள் 19–10–2010.
திருவள்ளுவர் ஆண்டு 2041
ஐப்பசி மாதம் 2ம் நாள்

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (ப) எண்.17, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள் 15.02.2010.

2. முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண் 7272/என்.சி3/2010, நாள் 14.06.2010.

------

**ஆணை:–**

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் உள்ள 18 மாவட்டங்களில், அவ்வாணையின் இணைப்பு –1 ல் குறிப்பிடப்பட்டுள்ள 2000 குழந்தைகள் மையங்களை நவீனப்படுத்தி எரிவாயு இணைப்பு (LPG), அடுப்பு (Gas Stove) மற்றும் பிரஷர் குக்கர் ஆகியவற்றை வழங்கி, மேடை அமைத்தல் மற்றும் மின் இணைப்பை ஏற்படுத்த மையம் ஒன்றுக்கு தலா ரூ.6500/– வீதம் தொடரா செலவீனமாக ரூ.1.20 கோடியும், எரிவாயு சிலிண்டர் வாங்க மையம் ஒன்றிற்கு தலா ரூ. 1200/– வீதம் ரூ.24.00 இலட்சம் தொடர் செலவினமாகவும், ஆக மொத்தம் ரூ.1.54 கோடி அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர் அவர்கள், ஏற்கெனவே 2006–2007 முதல் 2009–2010 வரை தமிழ்நாட்டில் 7940 குழந்தைகள் மையங்கள், எரிவாயு இணைப்பு, எரிவாயு அடுப்பு மற்றும் பிரஷர் குக்கர் வழங்கப்பட்டு, மின் வசதி ஏற்படுத்தப்பட்டு நவீனப்படுத்தப்பட்டுள்ளன என்றும், 2010–2011 ஆண்டு வரவு – செலவு திட்டத்தில் மேற்படி திட்டத்தை செயல்படுத்தி, 2000 குழந்தைகள் மையங்களை நவீனப்படுத்திட ரூ.1.54 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அதனைப் பயன்படுத்தி, 24 மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றிற்கு 60 குழந்தைகள் மையங்கள் வீதமும், மீதமுள்ள 7 மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றிற்கு 80 குழந்தைகள் மையங்கள் வீதமும், மொத்தம் 2000 குழந்தைகள் மையங்களில் உள்ள சமையலறைகளை நவீனப்படுத்தவும், அதற்கு தேவைப்படும் ரூ.1.30 கோடி (2000 மையங்கள்xரூ.6500) தொடராச் செலவினத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட திட்ட அலுவலர்கள், தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு எண்–1, பகுதி 99ன்படி (Article 99 of T.N.F.C Vol I)

முன் பணமாக பெறுவதற்கு அனுமதியளிக்கவும், ஆண்டு ஒன்றுக்கு ரூ.24.00 இலட்சம் தொடர் செலவினத்தை மாவட்ட திட்ட அலுவலர்களே (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்) செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கவும், மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுமானப்பணிகள் மற்றும் மின்சார வசதி செய்தல் போன்ற பணிகளை உள்ளூரில் உள்ள வசதி வாய்ப்புகளுக்கேற்ப செய்து முடிக்கவும், பொருட்களை மாவட்ட திட்ட அலுவலர்களே தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி பெற்று வழங்க அனுமதிக்கவும், தொடர் செலவினமான எரிவாயு சிலிண்டர் வாங்குவதைப் பொறுத்தவரை மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலையில் எரிவாயு சிலிண்டரை மையங்களுக்கு வழங்க அனுமதிக்க தமக்கு அதிகாரமளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்த அரசு, இவ்வாணையின் இணைப்பு–Iல் குறிப்பிடப்பட்டுள்ளபடி 31 மாவட்டங்களில் உள்ள 2000 குழந்தைகள் மையங்களை நவீனப்படுத்தி, எரிவாயு இணைப்பு (LPG), எரிவாயு அடுப்பு (Gas stove), பிரஷர்குக்கர் (Pressure cooker) சமையலறை மேடை மற்றும் மின் இணைப்பு வழங்குதல் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள இவ்வாணையின் இணைப்பு–IIல் உள்ளவாறு மையம் ஒன்றுக்கு தலா ரூ.6390/– வீதம் தொடரா செலவினம் மற்றும் மையம் ஒன்றிற்கு தலா ரூ.1,200/– வீதம் தொடர் செலவினமாக வழங்க மொத்தம் ரூ.1,51,80,000/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஒரு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) கீழ்க்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| தொடராசெலவினம் = ரூ.6390X2000 மையங்கள் = | | ரூ.1,27,80,000 |
| தொடர் செலவினம் = ரூ.1200X2000 மையங்கள் = | | ரூ.24,00,000 |
| | மொத்தம் | ரூ.1,51,80,000 |

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொடரா செலவினம் இணைப்பு–Iல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தொடர்புடைய மாவட்ட திட்ட அலுவலர்கள் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்) தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பு எண்.1, விதி 99ன்படி முன்பணமாக பெற்று உரிய அரசு விதிமுறைகளின்படி செலவினம் மேற்கொள்ளவும், அவ்வாறு செலவினம் மேற்கொண்டபின் பெறப்பட்ட முன் பணத்திற்கான பட்டியல்கள் மற்றும் பற்று வரவு ரசீதுகளை தொடர்புடைய சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலரிடம் சமர்ப்பித்து கணக்கினை நேர்செய்யுமாறு ஆணையிடப்படுகிறது. மேலும் தொடர் செலவினம் ரூ.24.00 இலட்சத்தை (2000xரூ.1200/–) இணைப்பு–Iல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட மாவட்ட திட்ட அலுவலர்களே (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்) செலவினம் மேற்கொள்வதற்கும், மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுமானப்பணிகள் மற்றும் மின்சார வசதி செய்தல் போன்ற பணிகளை உள்ளூரில் உள்ள வசதி வாய்ப்புகளுக்கேற்ப செய்து முடிக்கவும், பொருட்களை மாவட்ட திட்ட அலுவலர்களே நடைமுறையில் உள்ள தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி பெற்று வழங்க அனுமதிக்கவும், தொடர் செலவினமான எரிவாயு சிலிண்டரைப் பொறுத்தவரை மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குட்பட்டு, எரிவாயு சிலிண்டரை மையங்களுக்கு வழங்க அனுமதிக்கவும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையருக்கு அரசு அதிகாரமளிக்கிறது.

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2236– சத்துணவு 02 சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 101 சிறப்பு சத்துணவுத் திட்டம், பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத்திட்டம் JN தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மேம்பாட்டுத்திட்டம் நிலை–3, 24 பொருள்களும் வழங்கலும். (த.தொ.கு.2236–02–101 –JN – 2401)

6. இவ்வாணை நிதி(சந)த்துறையின் அ.சா.கு.எண்.58779/2010, நாள் 18.10.2010 ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மோகன் பியாரெ,
அரசுச் முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னை–113
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35
மாநில கணக்காயர்,
சென்னை–18/(பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை I/II),
சென்னை–18
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து
மாவட்ட கருவூல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்கள்,
(முதன்மைச் செயலர் / சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்
பணிகள் திட்டம், சென்னை–113 வழியாக)

நகல்

செயலாளர்,
குழந்தைகள் மற்றும் மகளிர் மேம்பாடு அமைச்சகம்,
மத்திய அரசு, சாஸ்திரிபவன்,
புதுடெல்லி – 110 001
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்
தலைமைச் செயலகம், சென்னை – 9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு முதன்மை செயலரின் தனிச் செயலர்,
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, சென்னை–9
நிதித்(சமுகநலம்)துறை, தலைமைச் செயலகம், சென்னை –9.
இருப்புகோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

20.10.2010

பிரிவு அலுவலர்.

20/10/10

## இணைப்பு – I

(அரசாணை (ப) எண்.157, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள் 19.10.2010)

குழந்தைகள் மையங்களின் சமையலறைகளை நவீனப்படுத்துதல்.

மாவட்ட வாரியாக அனுமதிக்கப்படும் மையங்கள் மற்றும் தொகை விவரங்கள்.

| வ எண் | மாவட்டத்தின் பெயர் | அனுமதிக்கப் படும் மையங்கள் | அனுமதிக்கப் படும் தொடரா செலவினம் (ஒரு மையத்திற்கு ரூ.6390/– வீதம்) ரூ. | அனுமதிக்கப் படும் தொடர் செலவினம் (ரூ.1200 வீதம்) ரூ. | அனுமதிக்கப்படும் மொத்த செலவினம் (ஒரு மையத்திற்கு ரூ.7590/– வீதம்) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | திருவாரூர் | 60 | 383400 | 72000 | 455400 |
| 2 | திருநெல்வேலி | 60 | 383400 | 72000 | 455400 |
| 3 | கிருஷ்ணகிரி | 60 | 383400 | 72000 | 455400 |
| 4 | கோயம்பத்தூர் | 60 | 383400 | 72000 | 455400 |
| 5 | வேலூர் | 60 | 383400 | 72000 | 455400 |
| 6 | பெரம்பலூர் | 60 | 383400 | 72000 | 455400 |
| 7 | மதுரை | 60 | 383400 | 72000 | 455400 |
| 8 | இராமநாதபுரம் | 60 | 383400 | 72000 | 455400 |
| 9 | தூத்துக்குடி | 60 | 383400 | 72000 | 455400 |
| 10 | கரூர் | 60 | 383400 | 72000 | 455400 |
| 11 | நாமக்கல் | 60 | 383400 | 72000 | 455400 |
| 12 | சென்னை | 60 | 383400 | 72000 | 455400 |
| 13 | கடலூர் | 60 | 383400 | 72000 | 455400 |
| 14 | தர்மபுரி | 60 | 383400 | 72000 | 455400 |
| 15 | விருதுநகர் | 60 | 383400 | 72000 | 455400 |
| 16 | திருவள்ளூர் | 60 | 383400 | 72000 | 455400 |
| 17 | கன்னியாகுமரி | 60 | 383400 | 72000 | 455400 |
| 18 | நாகப்பட்டினம் | 60 | 383400 | 72000 | 455400 |
| 19 | சிவகங்கை | 60 | 383400 | 72000 | 455400 |
| 20 | திருப்பூர் | 60 | 383400 | 72000 | 455400 |
| 21 | தேனி | 60 | 383400 | 72000 | 455400 |
| 22 | தஞ்சாவூர் | 60 | 383400 | 72000 | 455400 |
| 23 | திருச்சிராப்பள்ளி | 60 | 383400 | 72000 | 455400 |
| 24 | நீலகிரி | 60 | 383400 | 72000 | 455400 |
| 25 | விழுப்புரம் | 80 | 511200 | 96000 | 607200 |
| 26 | திண்டுக்கல் | 80 | 511200 | 96000 | 607200 |
| 27 | காஞ்சிபுரம் | 80 | 511200 | 96000 | 607200 |
| 28 | ஈரோடு | 80 | 511200 | 96000 | 607200 |
| 29 | புதுக்கோட்டை | 80 | 511200 | 96000 | 607200 |
| 30 | சேலம் | 80 | 511200 | 96000 | 607200 |
| 31 | திருவண்ணாமலை | 80 | 511200 | 96000 | 607200 |
| | மொத்தம் | 2000 | 12780000 | 2400000 | 15180000 |

(ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஒரு இலட்சத்து எண்பது ஆயிரம் மட்டும்)

மோகன் பியாரெ,
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

20.10.2010
பிரிவு அலுவலர்
20/10/10

## இணைப்பு – II

(அரசாணை (ப) எண்.157, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள்.19.10.2010)

குழந்தைகள் மையங்களில் உள்ள சமையலறைகளை நவீனப்படுத்துதல்.
ஒப்பளிக்கப்படும் தொடரா செலவினம் (ஒரு மையத்திற்கு)

| வ.எண் | பொருளின் பெயர் | | விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | கேஸ் அடுப்பு | --- | 500.00 |
| 2 | குக்கர் (12 லிட்டர்) (இந்தாலியம் உலோகத்தினால் ஆனது) | ஒரு மையத்திற்கு ஒன்று வீதம் | 1750.00 |
| 3 | எரிவாயு பிணை வைப்பு தொகை | 1250 | 1650.00 |
| 4 | ரெகுலேட்டர் | 150 | |
| 5 | ஆய்வுக்கட்டணம் | 50 | |
| 6 | ரப்பர் டியூப் (1.2 மீட்டர்) | 200 | |
| 7 | மேடை அமைத்தல் (ம) இதர செலவினம் | | 990.00 |
| 8 | மின்சார வசதி | | 1500.00 |
| | மொத்தம் | | ரூ.6390.00 |

### சுருக்கம்

தொடரா செலவினம் 2000 மையங்கள்
(ரூ.2000xரூ.6390) ரூ.127.80 இலட்சம்

தொடர் செலவினம் 2000 மையங்களுக்கு (ஒரு மையத்திற்கு ரூ.1200/– வீதம்) ரூ.24.00 இலட்சம்

மொத்தம் ரூ.151.80 இலட்சம்

மோகன் பியாரெ,
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

20-10-2010
பிரிவு அலுவலர்